# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.89/2021

## அ.சா. 13 (LW 16 )

| பெயர் | அனிதா | தொழில் | |
|---|---|---|---|
| கணவர் பெயர் | ராஜபிரபாகரன் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 05.10.2023 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது நிலக்கோட்டை வட்டம், செங்கட்டாம்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்காக எனக்கு சம்மன் இன்று காலை நீதிமன்ற வளாகத்தில் வைத்து கோர்ட் போலீசார் கொடுத்தார்கள். அப்போது காலை சுமார் 10.15 மணி இருக்கும். அப்போது தான் என்னிடம் சம்மனில் கையொப்பம் வாங்கினார்கள். இன்று இந்த வழக்கில் சாட்சி சொல்ல வரும்படி எனக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார். அதனால் நான் வந்தேன். வந்த இடத்தில் சம்மனில் கையொப்பம் வாங்கினார்கள்.

கடந்த 13.10.2016ம் தேதி நிலக்கோட்டை வட்டம், கோட்டுர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது, நானும், கிராம உதவியாளரும் எங்கள் அலுவலகத்தில் பணியில் இருந்த போது நிலக்கோட்டை காவல் ஆய்வாளர் மாலை 4 மணியளவில் போன் மூலம் ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக குற்றவாளியை விசாரிக்க வேண்டும் என்று என்னை அழைத்தார். பிறகு நிலக்கோட்டை காவல் நிலையத்திற்கு நானும், கிராம உதவியாளர் கருப்பையாவும் சென்றோம். எதிரி முரளி என்ற முரளிதரனை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் விசாரித்தார். அப்போது அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். முத்துராஜா என்பவரை பின் மண்டையில் கட்டையை வைத்து அடித்து கொன்றதாக வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும், கிராம உதவியாளர் கருப்பையாவும் கையொப்பம் செய்தோம். எதிரி முரளி என்ற முரளிதரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் அவர் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய ரத்தக்கறையுடன் கூடிய கட்டையை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அதன்பேரில் நாங்கள் ஆய்வாளருடன் உட்கடை பாறையூர் அருகே உள்ள Metro wale–ல் பிளாட்டுக்கு எதிரே உள்ள அரளிப்பூ செடிக்கு

அருகில் உள்ள ரத்தம்படிந்த ஒரு கட்டைக்குச்சியை எடுத்துக்கொடுத்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும், கிராம உதவியாளர் கருப்பையாவும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.8 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் கட்டை தான் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய கட்டை. அந்த கட்டை சா.பொ.3 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் வாக்குமூலம் கொடுத்த ஆஜர் எதிரி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.10.05 17:41:43 +0530

Additional District Judge,

Dindigul.